(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் மாணிக்கம் என்ற விசாரணைக் கைதி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் அது பற்றி கொடுத்திருக்கிறீர்கள் ; அதை இலாகாவிற்கு அனுப்பி விட்டேன். அங்கிருந்து பதில் வந்தால் நாளைக்கேகூட எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு). உடனடியாக விவாதிக்க முடியாது. பதில் வந்தபிறகுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

(இ) உறுப்பினர்கள் விடுதி வராண்டாவில் வெளியார் படுப்பது.

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் இரவு நேரங்களில் வராண்டாவில் அதிகமாகப் படுக்கிறார்கள். வராண்டாவிலேயே சிறுநீர் கழிக்கிறார்கள் ; மலம் கழிக்கிறார்கள். அதுபற்றிப் பலமுறை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இராத்திரி நேரத்தில் அறைக்குள் வந்து தங்குவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், வராண்டாவில் யாரும் படுக்கக் கூடாது என்று உத்தரவு போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை. ஆனால், உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும் ? மற்றவர்களைக் கண்டிக்கலாம். ஆனால், உங்களையெல்லாம் கண்டித்துவிட்டு நான் எங்கே போவது ? இப்பொழுதுள்ள சூழ்நிலையில் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தாலொழிய ஒன்றும் செய்ய முடியாது. ஆகவேதான், நீங்கள்தான் உங்களுக்குள்ளே கலந்து பேசி நல்ல முடிவுக்கு வர வேண்டுமே தவிர, வராண்டாவில் படுக்கிறார்கள் என்று சொன்னால் நான் என்ன செய்வது ? உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள்தான் அப்படிப் படுக்கிறார்கள். எந்த உறுப்பினருக்கு அவர்கள் வேண்டியவர்கள் என்று நான் பார்க்க முடியாது. ஆகவே, இதில் உறுப்பினர்களின் ஒத்துழைப்புதான் கோரப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS